# மணநாள் வாழ்த்து!

**மணமகன்: செல்வன் விக்னேஷ்வரன்** **மணமகள்: செல்வி வாசுகி**

## மண நாள்: 06-02-2022



**நிகழ்விடம்:** இலஷ்மி மஹால்,
**கமலாலயம் வடகரை, திருவாரூர்**

**பெருந்தரக்குடி** எனும் பக்கத்து ஊர்தனிலே,
பலகுடிகள் நினைவிலுண்டு! அந்நாளில்;
வணிகராய் வந்த பெருமகனார் **கலியபெருமாள்!**
இனியராய் பலருக்கும் ஆகி, தலைவரும் ஆனார்!

தகைவுடன் அவர் ஈந்த இளையமகன் **குமார்,**
தானுமோர் பணியில் சிறக்க, நெல்வணிகம்;
அரைவை ஆலை ஆகிவந்து கைத்தலம் பற்றிய,
காரிகை **சாந்தி**யுடன், நல்லறம் எனும் இல்லறம்



கண்டு இனியதாய் ஈன்ற மகனாம் செல்வன்,
**விக்னேஷ்** எனும் **விக்னேஷ்வரன்** தாமும்,
**பாலசுப்பிரமணியன் – மலர்க்கொடி** இணையரின்,
இனிய மகளாம் **வாசுகி** தன்னைக் கைத்தலம் பற்றும்,

கனிவுடை நாளாம் இதனில் மனமுவந்து வாழ்த்துகிறேன்!
இனியதாய் யாவும் பெற்று இயன்றசீர் யாவும் கொண்டு,
நனியதாய்ப் பலரும் போற்ற நலமுடன் வாழ்வீராக!
அணியதாய் அன்பின் தூவலில் அளிக்கும் வாழ்த்துதானே!
அன்புடன்,

**கு.ப. அசோகன்,** (of Ottakudi),
**செம்பாக்கம், சென்னை.**
**01-02-2022**



